**பாத்ததும்பர பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாத்ததும்பர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாத்ததும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் -சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவையான ஏனைய வருமானம் பொது பேரேட்டில் ரூபா 74,228,380 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 66,671,010 என ரூபா 7,557,370 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டின் போது வட்டி ரூபா 343,181 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.. | 2021 ஆம் ஆண்டின் போது சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நீர் சேவை திட்ட போக்குவரத்து இணைப்பு மற்றும் தேவையன சேவைகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 716,740 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய 06 அபிவிருத்தி திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,893,455 ஆன பெறுமதி கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தவறுதாலக அப்பெறுமதிக்கான அட்டவணையில் அந்த அபிவிருத்தி திட்டம் உள்ளடக்கப்பட வில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 18 சந்தர்ப்பங்களுக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 3,373,565 தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டமை காரணமாக நானாவித கடன்கொடுத்தோர் மற்றும் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தினால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | ரூபா 3,373,565 தொகையான நானாவித கடன் கொடுத்தோருக்குரிய தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2. நிகழத்தக்க பொறுப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதிகளை விரிவாக்குதல், மதில்களை உடைத்தல், அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுதல் மற்றும் மதகுகளை இடையூரு செய்தல் தொடர்பாக சபைக்கு எதிராக 18வெளித்தர்ப்பினருக்கு 2004 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை தொடுக்கப்பட்டிருந்த வழக்குகள் தொடர்பாக கணக்கு குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தேவையான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.3. இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 455,357,654 கூட்டுத் தொகையான 23 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 125,466,511 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்கண்டு விரைவில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 26,555,451 ஆன 6 கணக்கு விடயங்களுககுரிய பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | சொத்துக்கள் மெய்மையாய்வு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் சரியான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படுமென அறிய தருகின்றேன் | நிதி அறிக்கைகளில் காட்டப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,080,319 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,423,583 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப்பரதேசத்தில் நடாத்திச் செல்லப்பட்ட தனியார் ஆடைத்தொழிற்சாலையொன்றிலிருந்து 2018 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 129,888 ஆன நிலுவை வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுவனம் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக அறிய தருகின்றேன் | நிலுவை தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாணசபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 344,330 ஆன நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 29,122,168 ஆன முத்திரைக் கட்டணங்கள் நிலுவையாக காணப்பட்டன. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் முத்திரை கட்டணம் என்பன கிடைத்த தொகையுடன் ஒப்பிட்டு நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் கணக்கீடு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கிடைக்க வேண்டிய வருமானம் அறவிடுவதற்கும் அவற்றைற நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அலுத்கம சந்தை திருத்த வேலைகளுக்காக ரூபா 1,980,000 செலவிடப்பட்டிருந்த போதும் சந்தையை பயன்பாட்டிற்கு எடுக்காமல் விளைவற்ற வகையில் வைத்திரந்த காரணமாக எதிர்பார்த்த நலன்களை (out come) பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | உள்ளராட்சி மன்ற ஆணையாளரின் சீபீசீ /சீஎல்ஜீ/4/1/ பொது மற்றும் 2021.04.27 ஆந் திகதிய கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அலுத்கம வாரச் சந்தை தொடர்பாக பொது சபை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது | எதிர்பார்த்த நலன்ககளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அளுத்வத்தை திண்மக்கழிவு நிலையத்தின் வருமானம் மற்றும் செலவுகள் என்பவற்றை பாத்தும்பர மற்றும் குண்டசாலை பிரதேச சபைகள் ஆகிய இரண்டும் சமமாக பகிரந்து கொள்வதற்காக உடன்படிக்கை மேற்கொண்டு பாத்ததும்பர பிரதேச சபையால் ரூபா 3,339,857 செலவின மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் எவ்வித வருமான மொன்றையும் பெற்றுக் கொள்வதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரு உள்ளுராட்சி மன்றங்களுக்கிடையில் இத்திட்டத்தின் மொத்த வருமானம் மற்றும் செலவினங்களை திரட்டிய நிதிக்கு செலவு வைப்பது தொடர்பாக கலந்துரையாடல் இடம் பெற்ற போதிலும், குண்டசாலை பிரதேச சபை இவ்விடயம் தொடர்பில் போதிய கவனம் செலுத்தாமையால் அதனை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. | செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பேணிச் செல்வதற்கும் சபைக்கு உரித்தான வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஏலவிற்பனை செய்யப்பட்ட மெதிகலே தேக்கவத்த காணியில் சபைக்கு கையளிக்க வேண்டிய இரண்டு காணிகளில் 22 பேர்ச் அளவிலான காணி மீளாய்வாண்டிலும் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஏலவிற்பனை செய்யப்பட்ட காணியில் 2 பகுதிகள் சபைக்கு சொந்தமாக உள்ளதென தயவுடன் அறிய தருகின்றேன். | முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு கைத்தொழில் கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 39,984,889 ஆகவும் அது தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 1 ஆண்டு முதல் 3 வருடங்களுக்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 191,664 ஆக இருந்ததுடன் 3 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 724,003 ஆக இருந்தது. | நிர்மாணத்துறையின் கடன்பட்டோரை மீள் அளிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 63,052,412 ஆக இருந்ததுடன் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 1 ஆண்டு முதல் 3 ,ஆண்டு வரை காலப்பகுதிக்கான கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 59,282,990 மற்றும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,769,422 ஆக இருந்தது. | இந்த உருப்படிகள் விரைவாகப் பரிசீலிக்கப்பட்டு விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நகர அபிவிருத்தி வைப்புக் கணக்கின் மீதியானது நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பயனுள்ள அபிவிருத்தித் திட்டத்தில் முதலீடு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | செலுத்த வேண்டிய மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | பிரதேச சபை நிதியத்தின் நிதியை சபையின் நோக்கங்களை | வெளிவாரி பொறுப்புக்கள் அனைத்தையும் தீர்வு செய்யும் வரை | நடைமுறைக் கணக்கில் விளைவற்ற |

| | | |
|---|---|---|
| அடைவதற்கோ அல்லது சட்டத்தின் 131 வது பிரிவின் படி முதலீடு செய்வதற்கோ அல்லது ரூபா 76,506,259 ஆன வெளிவாரி பொறுப்பினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படும் நடைமுறைக் கணக்கில் ரூபா 27,274,935 முதல் ரூபா 111,066,64 வரை வீச்சில் மீளாய்வாண்டு முழுவதும் விளைவற்று காணப்பட்டன. | அப்பெறுமதி சபைக்கு சொந்தமான நடைமுறைக் கணக்கில் பேணிச்செல்லப்பட வேண்டுமென அறிய தருகின்றேன். | வகையில் அதிக காலம் பணம் வைக்கப்படாத வகையில் நிதி முகாமைத்துவம் முறையாக செய்யப்பட வேண்டும் |

## 3.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 5,302,340 பெறுமதியான நீர் பௌசர் மற்றும் நீர் மோட்டார், டிராக்டர் மற்றும் களி பவுசர், சிங்கர் மிதி வண்டி, உழவு இயந்திரம் மற்றம் கழிவுப் பொருள் வண்டி மற்றும் 05 வாகனங்கள் 05 - 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவ்வாகனங்களை உரிய நிலைக்கு கொண்டு வருவதற்கு அல்லது ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விளைவற்ற வகையில் காணப்பட்ட 08 வாகனங்களில் 03 சொத்துக்கள் ஏலவிற்னை செய்யப்பட்டுள்ளதுடன் தகவல் இல்லாத 02 சொத்துக்கள் தொடர்பாக தவல்களை தேடிக் கொள்வதற்கும் எஞ்சிய சொத்துக்களை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துகளை விளைவற்ற வகையில் வைத்திருப்பதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற, வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட 8 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 477,657 ஆன இடர் கடன் மீதிகள் அறவிடு வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக. | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மடவள நகரத்திற்கு அண்மையில் வழிந்தோடும் பலகொட ஓயாவிற்கு இடையூராகும் வகையில் அத்துமீறிய நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஓயாவிற்கு கழிவுகளை வெளியேற்றுதல் காரணமாக அசுத்தமடைந்து காணப்பட்ட போதும் அது தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் போது பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் இணைந்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மேலும் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளதாக | சுற்றாடல் சேதங்களைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங் காணப்பட்டு ரூபா 400,000 ஆன நிதி ஏற்பாடு மேற்கொள்ளபடப்டிருந்த போதும் அந்த இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக பாதீட்டில் 505(7) செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 400,000 ஆன நிதி ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அதில் ரூபா 65,000 குறித்த செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டுள்ளதாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |